

## இந்து சமய அறநிலையத்துறை

# அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில்,

**மேல்மலையனூர் (ம) வட்டம், விழுப்புரம் மாவட்டம்**

தொலைபேசி : 04145 – 294466

மின்னஞ்சல் முகவரி : angalammantemple@gmail.com

**பசலி 1432 –க்கு சிகை சேகரித்தல் உரிமம்**

**பொது மறு ஏலம்/டெண்டர் அறிவிப்பு நோட்டீஸ்**

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் நகர் (ம) வட்டம், அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயிலின் பசலி 1432–க்கு சிகை சேகரித்தல் உரிமம் பொது மறு ஏலம்/டெண்டர் எதிர்வரும் 22.07.2022 முற்பகல் 11.30 மணிக்கு, இந்து சமய அறநிலையத்துறை உயர் அலுவலர்கள் முன்னிலையில் இத்திருக்கோயில் அலுவலகத்தில் பகிரங்க பொது ஏலம்/டெண்டர் நடைபெறவுள்ளது. டெண்டர் அளிப்பவர்கள் இணையதள முகவரியான www.tenders.tn.gov.in என்ற இணைய தளத்தில் இலவச பதிவிறக்கம் செய்தும் அல்லது நேரிடையாக படிவத்தினை பெற்று டெண்டர் அளிக்கலாம்.

**பொது மறு ஏலம்/டெண்டர் இனங்கள் விவரம்**

| | | |
|---|---|---|
| 1. | ஏல இன விவரம் | பசலி 1432–க்கு சிகை சேகரித்தல் உரிமம் |
| 2. | குத்தகை காலம் | 06.08.2022 முதல் 30.06.2023 முடிய உள்ள நாட்களுக்கு மட்டும் |
| 3. | டெண்டர் படிவம் நேரடி விற்பனை | 15.07.2022 முதல் 21.07.2022 பிற்பகல் 5.30 மணி வரை |
| 4. | டெண்டர் படிவம் ஒன்றின் விலை | ரூ.500/– (ரூபாய் ஐநூறு மட்டும்) |
| 5. | ஏலம்/டெண்டர் நடைபெறும் நாள், நேரம் மற்றும் இடம் | 22.07.2022 முற்பகல் 11.30 மணி, திருக்கோயில் அலுவலகம் |
| 6. | ஏலம்/டெண்டர் டெபாசிட் தொகை | ரூ.25,00,000/– (ரூபாய் இருபத்தைந்து லட்சத்திற்கான வரைவோலை) |

**ஏலம்/டெண்டர் நிபந்தனைகள்**

1) ஏலம் கேட்க விரும்புவோர் ரூ.25,00,000/– உதவிஆணையர்/செயல்அலுவலர், அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில், மேல்மலையனூர் என்ற பெயரில் வங்கி வரைவோலையாக டெபாசிட் செலுத்தி ஏலத்தில் கலந்து கொள்ளலாம்.

2) டெண்டர் அளிக்க விரும்புவோர், ரூ.25,00,000/–க்கான வரைவோலையை, உதவிஆணையர்/செயல்அலுவலர், அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில், மேல்மலையனூர் என்ற முகவரிக்கு வரைவோலையாக எடுத்து, அடித்தல், திருத்தல் இன்றி தாங்கள் கோரும் டெண்டர் தொகையை எண்ணாலும், எழுத்தாலும் தெளிவாக டெண்டர் பாரத்தினை பூர்த்தி செய்து, வரைவோலையை அசலாக இணைத்து அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் 22.07.2022 முற்பகல் 11.00 மணிக்குள் சேர்க்க வேண்டும். அதற்குப் பின்னர் வரும் டெண்டர்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**3)** டெண்டர் அளிப்பவர்கள் www.tenders.tn.gov.in என்ற இணைய தளத்தில் டெண்டர் படிவத்தினையும், டெண்டர் நிபந்தனைகளையும் பதிவிறக்கம் செய்து, தாங்கள் கோரும் டெண்டர் தொகையை எண்ணாலும், எழுத்தாலும் பூர்த்தி செய்து கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு டெண்டர் அளிக்கலாம்.

4) **டெண்டரில் கலந்து கொள்பவர்கள் தங்களது ஆதார் அட்டையை கண்டிப்பாக கொண்டு வரவேண்டும்.**

**5) 22.07.2022** முற்பகல் **11.30** மணிக்கு மேற்படி உரிமத்திற்கான ஏலம் முதலில் நடத்தப்படும், ஏலத்தில் உயர்ந்த கேள்வி தொகைக்கு முடிவு செய்யும் பட்சத்தில், ஏல நடவடிக்கை அத்துடன் முடிக்கப்பட்டு, பின்னர் வரப்பெற்ற மூடி முத்திரையிட்ட டெண்டர்கள் திறக்கப்படும். இதில் ஏலத் தொகை மற்றும்உயர்ந்த டெண்டர் தொகையை ஒப்பிட்டு எந்த தொகை உயர்ந்த தொகையோ அத்தொகையே உறுதி செய்யப்படும்.

**6)** சென்ற ஆண்டு உறுதி செய்யப்பட்ட குத்தகை உரிம தொகையினை விட **15%** அளவினை விட கூடுதலாக உள்ள டெண்டர்/ஏல கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும். 15% குறைவாக உள்ள டெண்டர்/ ஏல கேள்வி நிராகரிக்கப்படும். ஏலம்/டெண்டர் நடத்த வேண்டியதாயின் டெண்டரில் அதே அசல் வரைவோலையை செலுத்தலாம்.

**7)** டெபாசிட் தொகைக்கான (DD) வங்கி வரைவோலையின் (Xerox) நகல் வைத்திருக்க வேண்டும். அதனை சரிபார்த்து அவர்கள் மட்டுமே டெண்டர் திறப்பு மற்றும் ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

**8)** இந்துக்கள் மட்டுமே ஏலம்/டெண்டரில் கேள்விதாரராக கலந்துக்கொள்ள தகுதியுடையவர் ஆவார்கள்.

**9)**டெபாசிட் தொகை உதவிஆணையர்/செயல்அலுவலர், அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில், மேல்மலையனூர் என்ற பெயரில் தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் வரைவோலையாக வழங்கப்பட வேண்டும்.

**10)** குறிப்பிட்ட கால வரம்பிற்குப் பின்னர் வரும் டெண்டர்களும், பிணை வைப்புத் தொகைக்கான அசல் வங்கி வரைவோலை இணைக்காமலோ. சரிவர படிவம் நிரப்பப்படாமலோ, கையொப்பம், தேதி முதலியன தவறுகள், விடுதல்கள், அடித்தல், திருத்தங்களுடன் வரும் டெண்டர்களும் திருக்கோயில் மதிப்பினை விட குறைவாக வரப்பெற்ற டெண்டர்களும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. மற்றும் டெபாசிட் தொகையையும் பறிமுதல் செய்யப்படும்.

**11)** உறுதி செய்யப்பட்ட ஏலதாரர்/டெண்டர்தாரர் டெபாசிட் தொகையினை தவிர்த்து மற்றவர்களுடைய டெபாசிட் தொகை காசோலை மூலம் மட்டுமே வழங்கப்படும்.

**12)** ஏலதாரர்/டெண்டர்தாரர்கள் குத்தகைத் தொகையை முழுமையாக அன்றைய தினமே அதாவது டெண்டர் திறப்பு தினத்தன்று செலுத்திவிடவேண்டும். குத்தகைதாரர் முழு தொகையும் உடனே செலுத்தவில்லையென்றால் ஏலம்/டெண்டர் இரத்து செய்து குத்தகை டெபாசிட் தொகையையும் பறிமுதல் செய்யப்படுவதுடன் மறுடெண்டர் மூலமாகவோ, அல்லது தனிப்பட்ட முறையிலோ குத்தகைக்கு விடவோ நடவடிக்கை எடுக்கப்பட்டு அத்தகைய நடவடிக்கையின் காரணமாக திருக்கோயிலுக்கு நஷ்டம் ஏதேனும் ஏற்பட்டால் அந்த நஷ்டத்தை முந்தைய குத்தகைதாரரிடம் இருந்து வசூலிக்கப்படும். மாறாக லாபமேதும் ஏற்பட்டால் அத்தகைய லாபத்தில் முந்தய

குத்தகைதாரருக்கு எவ்வித உரிமையும் கிடையாது. வெற்றி பெற்றவரின் டெபாசிட் தொகை குத்தகை காலம் முடிவுற்ற பின்பே திருப்பித்தரப்படும். எக்காரணத்தைக் கொண்டும் அதனை ஈடு செய்துக் கொள்ளும் படியாக கோரக் கூடாது. டெபாசிட் தொகைக்கு வட்டியேதும் கிடையாது.

**13)** குத்தகைதாரர் குத்தகை உரிமையினை எவ்விதத்திலும் வேறு நபருக்கு முழுமையாகவோ அல்லது ஒரு பாகமாகவோ மாற்றவோ அல்லது உள் குத்தகைக்கு விடவோ கூடாது. சம்பந்தப்பட்ட குத்தகை உரிமையை அனுபவிக்கும்போது திருக்கோயிலுக்கோ, அதன் உடமைகளுக்கோ, சேவார்த்திகளுக்கோ, பணியாளர்களுக்கோ, அவர்களின் உடமைகளுக்கோ எவ்வித சேதமோ, நஷ்டமோ விளைவிக்கக்கூடாது. மீறி ஏற்படும் அனைத்து நஷ்டங்களுக்கும், சேதங்களுக்கும் அவரே பொறுப்பு, ஆதலால் சம்பந்தப்பட்ட ஒப்பந்தக் காரரிடமிருந்து வசூலிக்கப்படும்.

**14)** உரிமைகாலம் முடிந்தவுடன் இந்த ஏலம்/டெண்டருக்கு உட்பட்ட இடங்களில் உரிமை பெற்றவருக்கு யாதொரு பின் தொடர்ச்சியும், எவ்வித பாத்யதையும் கிடையாது.

**15)** சேவார்த்திகளுக்கும், திருக்கோயிலுக்கும் இடையூறு ஏற்படாவண்ணமும் எவ்வித புகாருக்கு இடமின்றியும் குத்தகை உரிமையை நடத்திவர வேண்டும்.

**16)** இத்திருக்கோயிலுக்கு எவ்வகையிலும் பாக்கி செலுத்த வேண்டியவர்கள் மற்றும் திருக்கோயில் நலன்களுக்கு எதிராக செயல்பட்டவர்கள் திருக்கோயில் மூலமாகவோ, திருக்கோயில் வழக்கறிஞர் மூலமாகவோ நோட்டீஸ் பெற்றவர்கள் இத்திருக்கோயிலுக்கு எதிராக நீதிமன்ற வழக்குகளில் இருப்பவர்கள், நிபந்தனைகளில் ஏதாவது தகுதியற்றோர் இந்த ஏலம்/டெண்டரில் பங்குக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

**17)** குத்தகைதாரர்கள் ஒவ்வொருவரும் டெண்டர் நோட்டீஸில் அனைத்து நிபந்தனைகளையும் ஒப்புக்கொண்டதற்குச் சான்றாக டெண்டர் நோட்டீசிலும், டெண்டர் பதிவேட்டிலும் முழு கையொப்பம் இடவேண்டும். இவ்வாவணத்தையே திருக்கோயில் நலன்களை பாதுகாக்கும் காரியங்களுக்காக பயன்படுத்தப்படும். மற்றும் ரூ. **50/–** மதிப்புள்ள அரசு முத்திரைப் பத்திரத்தில் அனைத்து நிபந்தனைகளையும் உள்ளடக்கிய ஒப்பந்தம் மேற்கொள்ள வேண்டும்.

**18)** குத்தகைதாரர்கள் தனக்கு உதவியாக நியமித்துக் கொள்ளும் உதவியாளர்கள் கண்டிப்பாக **21** வயதுக்கு மேல் தான் இருக்க வேண்டும். குத்தகை உரிமையை பராமரிக்கும் அல்லது வசூல் செய்யும் உதவியாளர்களுக்கு அவர்தம் அடையாள அட்டை கண்டிப்பாக வழங்க வேண்டும். உதவிக்கு வைத்துக்கொள்ளும் நபர்களின் பட்டியல் நிர்வாகத்திற்கு அளித்து முன் அனுமதி பெற வேண்டும். குத்தகைதாரர்கள், குத்தகை காலத்தில், குத்தகைக்கு விடப்பட்ட இடத்தில் இருக்க வேண்டும்.

**19)** நிர்வாகத்திற்கு தெரியாமல் பெயர் மாற்றம் முகவரி மாற்றம் செய்து டெண்டரில் கலந்துக்கொள்ள முன்வந்து டெபாசிட் கட்டியவர்கள், இடையில் பாக்கியுள்ளவர்கள் என்று நிர்வாகம் முடிவு செய்தால் டெபாசிட் தொகை திருப்பி கொடுக்காமல் பாக்கிக்கு ஈடுசெய்துக் கொள்ளப்படும் டெண்டரில் மேற்கொண்டு பங்குபெறவும் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

**20)** இந்த உரிமம் பெறுவதன் தொடர்பாக அரசுக்கு செலுத்தவேண்டிய விற்பனை வரி, வருமான வரி முதலியவைகள் செலுத்த வேண்டியிருந்தால், டெண்டர் உறுதி பெற்றவர்கள் தன் சொந்த பொறுப்பில் செலுத்திக்கொள்ளவேண்டும்.

**21)** குத்தகை உரிமை பெற்றவர்கள் குத்தகைக் காலம் முடிந்தவுடன் எவ்வித ஆட்சேபனையும் கூறாமல் இடத்தை காலி செய்து கொடுத்து விடவேண்டும்.

**22)** திருக்கோயிலுக்கு சொந்தமான இடத்தில் சினிமா பாடல்கள், இதரவகை ஆட்சேபனைக்குறிய ஒலி பாடல்களை போட அனுமதியில்லை. திருக்கோயில் நிர்வாகத்தினரின் அனுமதியின்றி எவ்வித போர்டுகளோ, பேனர்களோ ஒட்டுவதற்கும், பிட் நோட்டீஸ்களை வெளியிடுவதற்கும் அனுமதியில்லை.

**23)** நிபந்தனைகளை மீறி செயல்பட்ட குத்தகைதாரர்கள், மற்றும் இது சம்பந்தமாக சேவார்த்திகளிடம் புகார்களை பெற்றவர்கள் மற்றும் கூடுதல் கட்டணம் வசூலித்ததற்காக திருக்கோயில் மூலம் நோட்டீஸ் பெற்றவர்கள் இந்த டெண்டரில் பங்கு கொள்ள அனுமதியில்லை.

**24)** குத்தகைதாரர்கள் தனக்கும், தனது உதவிளார்களுக்கும், தனது பொருட்கள் கடை போன்றவற்றை தீ மற்றும் மின்சாரம் போன்ற சகல விபத்துகளிலிருந்தும் பாதுகாக்க இன்சூரன்ஸ் செய்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு விபத்து ஏதும் ஏற்பட்டால் அதற்காக திருக்கோலிலிருந்து நஷ்ட ஈடு ஏதும் பெறுவதற்கு உரிமையில்லை. மேலும் குத்தகைதாரர் மூலம் மேற்கண்ட விபத்து ஏற்பட்டு திருக்கோயிலுக்கு நஷ்டம் ஏற்பட்டால் அதனை சம்பந்தப்பட்ட குத்தகைதாரரிடமிருந்து வசூலிக்கப்படும்.

**25)** குத்தகைதாரர்கள் தனக்கு நிர்ணயிக்கப்பட்ட குத்தகை உரிமையைத் தவிர வேறு எந்த குத்தகை உரிமையிலும் தலையிடுவதற்கு அனுமதியில்லை.

**26)** பினாமி பெயரில் டெண்டர் படிவங்களை பெறவும் அனுமதியில்லை. பினாமி பெயரில் டெண்டர் படிவத்தை பெற்றிருப்பது பின்னர் தெரியவந்தால் டெண்டரில் கலந்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

**27)** டெண்டர் படிவத்தில் ஒப்பந்தத் தொகையை குறிப்பிடும்போது அடித்தல் திருத்தல் இல்லாமல் குறிப்பிடவேண்டும். அவ்வாறு அடித்தல் திருத்தல் ஏற்பட்டிருந்தால் அதற்காக சுருக்கொப்பம் செய்து அனுப்ப வேண்டும். தவறினால் ஒப்பந்தப்படிவத்தை பரிசீலணைக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**28)** டெண்டர் படிவத்தை பெற்று குறிப்பிட்ட குத்தகை இனங்களுக்கான டெபாசிட் தொகையை செலுத்தியவர்கள் தவிர பிற நபர்களை டெண்டர் திறப்பின்போது அனுமதிக்க இயலாது.

**29)** குத்தகைதாரரோ, அவர்களது உதவியாளர்களோ, மது, போதை பொருட்கள் உட்கொண்டு பணி செய்வதோ, பக்தர்களிடம் மரியாதைக் குறைவாக நடந்துக்கொள்வதோ கூடாது.

**30)** உரிமைக்காலம் முடிவுற்றவுடன் எவ்வித மறுப்புமின்றி இடத்தினை திருக்கோயில் வசம் ஒப்படைக்க வேண்டும். ஒப்படைக்கத் தவறினால் ஆக்கிரமிப்புதாரராக கருதி அவ்விடத்தில் உள்ள குத்ததைதாரர் பொருட்களை அருகில் உள்ள நபர்கள் முன்னிலையில் கணக்கீடு செய்து வெளியே எடுத்து வைத்துவிட்டு திருக்கோயில் வசப்படுத்தப்படும். அவ்வாறு சேகரித்து வைக்கப்பட்டுள்ள பொருட்கள் குறித்து எவ்வித இழப்பீடும் கோரக்கூடாது. இந்நிகழ்வு குறித்து எவ்வித உரிமையும் கோரிடக்கூடாது. சாட்சிகள் முன்பாக கணக்கீடு செய்து எடுத்து வைத்த பொருட்களை ஏழு தினக்ங்களுக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும். தவறினால் அவைகளை பொது ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

**31)** எந்த நோக்கத்திற்காக குத்தகை உரிமையை குத்தகைக்கு விடப்படுகிறதோ அந்த நோக்கம் தவிர பிற காரியங்களுக்கு பயன்படுத்தக்கூடாது. குத்தகைக்கு விடப்பட்ட இடத்தை/கட்டிடத்தை எவ்வித மாறுதலும் முன் அனுமதியின்றி செய்தல் கூடாது.

**32)** குத்தகைக்கு விடப்பட்ட இடத்தை எவ்வகையிலும் இந்து சமய நம்பிக்கைகளுக்கு எதிராக பயன்படுத்தக்கூடாது. புலால் மற்றும் மது போன்ற லாக்ரி அருந்தும் இடமாக பயன்படுத்தக்கூடாது.

**33)** திருக்கோயில் பழக்க வழக்கத்திற்குட்பட்டும், இந்து சமய அறநிலைய துறை சட்டம் மற்றும் அதன் கீழ் இயற்றப்பட்ட விதிமுறைகளுக்குட்பட்டும், உத்திரவுகளுக்குட்பட்டும் குத்தகைதாரர் குத்தகை உரிமையை நடத்திவரவேண்டும்.

**34)** குத்தகை உரிமை பெற்றவர்கள் குத்தகை காலத்தின் நடுவே இறந்துபோனாலோ, அல்லது கடன்காரராகிபோனாலோ அல்லது இதர காரணங்களினாலோ அவருடைய வாரிசுகள் எஞ்சிய காலத்தை நிபந்தனைகளின்படி நடத்திட முன் அனுமதி பெற வேண்டும். திருக்கோயில் நிர்வாகம் இரத்து செய்ய தீர்மானித்தால் தொடர்ந்து ஏல காலத்தை அனுபவிக்க முடியாது.

**35)** சிகை சேகரித்தல் உரிமை பசலி **1432** க்கு **(06.08.2022** முதல் **30.06.2023** முடிய**)**.

**36)** ஏலம்/டெண்டர் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டவர்கள் மட்டுமே இதில் கலந்து கொள்ள வேண்டும்.

**37)** ஏலத்தில் உயர்ந்த கேள்விதாரர் தனக்கு ஏலம் முடித்து தர வேண்டும் என கோர முடியாது. மேற்கொண்டு கேள்வி கேட்கவும் முடியாது. ஏந்த ஆட்சேபணையும் செய்ய முடியாது.

**38)** ரூ.**25,00,000/–** வரைவோலையாக பெற்று டெண்டர் கொடுப்பவர்கள் ஏலத்திலும் கலந்து கொள்ளலாம். இதற்கு வரைவோலையின் ஜெராக்ஸ் (Xerox) நகலினை செலுத்தி ஏலத்தில் கலந்து கொள்ளலாம்.

**39)** ராஜீகம் அல்லது தெய்வீகம் இவற்றால் ஏற்படும் இழப்புகளுக்கு நிர்வாகம் பொறுப்பல்ல.

**40)** ஏலம்/டெண்டரை ஏற்றுக்கொள்ளவோ, தேதி மாற்றவோ, எந்த நபரையும் ஏலம் கேட்க மறுக்கவோ, ஏலத்தை நிறுத்தவோ, ஏல நிபந்தகைளை கூட்டவோ அல்லது குறைக்கவோ உதவிஆணையர்/செயல்அலுவலருக்கு அதிகாரம் உண்டு.

**41)** ஏலம்/டெண்டரில் கலந்துகொள்பவர்கள் அனைத்து நிபந்தனைகளையும் தெரிந்து கொண்டதாக கருதப்படும் கையொப்பம் செய்த பின்னரே ஏலம் கேட்க அனுமதிக்கப்படும். இதர நிபந்தனைகள் இத்திருக்கோயில் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் கேட்டு கலந்து கொள்ளலாம்.

**42)** முடிகாணிக்கை ஷெட்டில், பக்தர்களிடமிருந்து நீக்கப்பட்ட முடியினை அவ்வப்போது சேகரித்து எடுத்துக்கொள்ள வேண்டும். பிரதி வாரம் வியாழக்கிழமை சேகரித்த முடியினை திருக்கோயில் வளாகத்தில் இருந்து மாலை **5.00** மணிக்குள் குத்தகைதாரர் எடுத்து செல்ல வேண்டும், தவறினால் அம்முடியினை திருக்கோயில் சுவாதீனப்படுத்தப்படும். சுவாதீனப்படுத்தப்பட்ட முடியினை ஏலதாரர் உரிமை கோர முடியாது.

**43)** இப்பணிக்குரிய முன்வைப்புத் தொகை உதவிஆணையர்/செயல்அலுவலர், அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில், மேல்மலையனூர் என்ற பெயரில் வரைவோலையாக இந்தியன் வங்கியில் மாற்றத்தக்க வகையில் வழங்கப்பட வேண்டும். இவ்வரைவோலையின் நகல் கொண்டுவரும் நபர்கள் மட்டுமே பொது ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

**44)** முடியினை சேகரிக்க குத்தகைதாரர் தனது சொந்த பொறுப்பில் **21** வயதுக்கு மேற்பட்ட நபர்களை நியமித்துக்கொள்ள வேண்டும். அவர்களின் பெயர்கள், புகைப்படத்துடன் திருக்கோயில் நிர்வாகத்திடம் அத்தாட்சி பெற்று சம்பந்தப்பட்ட குத்தகைதாரர் வழங்க வேண்டும். இந்த அடையாள அட்டை பெற்ற நபரையே முடிசேகரிக்கும் பணியினை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும். டெண்டர்

உறுதி செய்யப்பட்ட 15 தினங்களில் முடிக்கப்பட வேண்டும், இல்லையேல் தங்களது குத்தகை உரிமை ரத்து செய்ய நேரிடும்.

45) முடியிறக்கும் நபர்கள் முடியிறக்குவதற்கான கத்தியினை சுத்தமாகவும், சுகாதார முறைப்படியும் வைத்திருக்க வேண்டும். ஒருவருக்கு முடியிறக்கிய அதே பிளேடைக் கொண்டு மற்றவருக்கு முடியிறக்கக்கூடாது. அதனை கண்காணிக்க வேண்டிய பொறுப்பு சம்பந்தப்பட்ட குத்தகைதாரரை சார்ந்ததாகும். தவறினால் சம்பந்தப்பட்ட குத்தகைதாரர் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும். மழிக்கும் கத்தியினை கிருமி நாசினி கொண்ட கரைசலில் கழுவிய பின்பே முடியிறக்க பயன்படுத்த வேண்டும்.

46) கட்டணச்சீட்டு வாங்காமால் வரும் பக்தர்களுக்கு கண்டிப்பாக முடியிறக்குதல் கூடாது.

47) முடியிறக்குபவர்கள் மற்றும் முடி சேகரிப்பவர்கள், இவர்களால் ஏற்படும் எந்தவிதமான பிரச்சினையானாலும், அதனை சம்பந்தப்பட்ட குத்தகைதாரர் முழு பொறுப்பேற்க வேண்டும். இது சம்பந்தமாக மேல் நடவடிக்கை தொடர வேண்டியிருந்தால் காவல் துறையினரிடமும், திருக்கோயில் செயல் அலுவலர் அவர்களிடம் எழுத்து மூலம் புகார் அளிக்க வேண்டும்.

48) முடிசேகரிக்கும் நபர்கள், முடியிறக்கும் நபர்கள் லுங்கி கட்டிக்கொண்டு பணியாற்றக் கூடாது. வேட்டி அணிந்ததுக்கொண்டுதான் பணியாற்ற வேண்டும்.

49) டெண்டர்/பொது ஏலம் தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறை சட்டத்தின் நிர்ணயிக்கப்பட்டுள்ள விதிகளின்படி நடத்தப்படும். இந்த விதிகளின்படி டெண்டர்/பொது ஏலம் திறப்பு முடிவு செய்வது அறநியைலத்துறை ஆணையரின் மறுப்பாணை அதிகாரத்திற்குட்பட்டது.

50) முடியினை சேகரிக்கும் குத்தகைதாரர் தனது சொந்த செலவில் தேவையான உபகரணங்களை வைத்துக்கொள்ள வேண்டும்.

51) எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்களை மேற்கண்ட முடிஷெட்டில் உபயோகப்படுத்துதல் கூடாது. பக்தர்களின் வசதிக்காக முதலுதவி ஏற்பாடு செய்து வைத்திருக்க வேண்டும்.

52) குத்தகைதாரர்களோ, அவர்களது உதவியாளர்களோ பக்தர்களிடம் மரியாதைக் குறைவாக நடந்துக் கொள்ளக்கூடாது.

53) முடியிறக்கும் உரிமையை குத்தகைக்கு எடுத்த குத்தகைதாரர் உதவிஆணையர்/செயல் அலுவலர் குறிப்பிட்ட முடியிறக்கும் ஷெட்டில் மட்டுமே பக்தர்களுக்கு முடியிறக்க வேண்டும். அந்த ஷெட்டில் ‘‘முடியிறக்குமிடம்’’ என்பதற்கான விளம்பர பலகைகள் வைத்து அதற்கான கட்டணத்தையும் ஒப்பந்தக்காரர் பெயரினையும் தெளிவாக எழுதி வைக்க வேண்டும். மேற்கண்ட ஷெட்டினை சுத்தமாகவும், சுகாதார முறைப்படியும் வைத்துக்கொள்ள வேண்டும்.

54) குடிபழக்கம், புகையில் பழக்கம் உள்ளவர்களை முடியிறக்கும் பணிக்கு பணியமாத்துதல் கூடாது. அவ்வாறு இருந்தால் அதற்கு குத்தகைதாரரே முழுபொறுப்பாக்கப்பட்டு குத்தகை உரிமம் ரத்து செய்யப்படும்.

**55)** முடியிறக்கும் நபர்கள் பக்தர்களிடம் கட்டாயப்படுத்தி கூடுதல் கட்டணம் வசூலிக்கக்கூடாது. இதனை கண்காணிக்க வேண்டிய பொறுப்பு சம்பந்தப்பட்ட குத்ததைதாரரையே சார்ந்ததாகும்.

**56)** இதர நிபந்தனைகள் ஏதுமிருப்பின் ஏல தினத்தன்று ஏலத்தின் போது அறிவிக்கப்படும்.

-----

திரு.இ. ஜீவானந்தம், எம்.எஸ்ஸி.,பி.எல்..
உதவிஆணையர்/செயல்அலுவலர்

திரு. ரா. மு. வடிவேல் பூசாரி
அறங்காவலர் குழுத்தலைவர்
திரு. சு. செந்தில் குமார் பூசாரி, அறங்காவலர்
திரு. அ. தேவராஜ் பூசாரி, அறங்காவலர்
திரு. ர. ராமலிங்கம் பூசாரி, அறங்காவலர்
திரு. சி. செல்வம் பூசாரி, அறங்காவலர்
திரு. ம. சரவணன் பூசாரி, அறங்காவலர்
திரு. வ. சந்தானம் பூசாரி, அறங்காவலர்